අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/60/07/44/බඳවා ගැනීම(i)
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2019.07.12

..........................................................
..........................................................
..........................................................
..........................................................

நேர்முகத் தேர்வு இல. : ...............................................

**இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018 (2019)**

1885/31 இலக்க 2014.10.22 ஆம் திகதிய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய 2018 (2019) ஆண்டில் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு தாங்கள் அழைக்கப்படுகின்றீர்கள் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

02. அதற்கான நேர்முகத்தேர்வுக்காக .............................. ஆம் திகதி ................. மணிக்கு பத்தரமுல்ல, இசுருபாய, கல்வி அமைச்சின் 4ம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்திற்கு வருகை தருமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

03. அன்றைய தினம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் சேவை அனுபவம் என்பன தொடர்பான ஆவணங்களினது **மூலப் பிரதி மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் சான்றுபடுத்தப்பட்ட நிழற்பிரதிகளுடன்** அவற்றை வெவ்வேறாக இரண்டு கோவைகளில் கோவைப்படுத்தி தயாரித்து எடுத்துவருமாறு மேலும் அறியத்தருகின்றேன். **(இல. i முதல் vi வரையான ஆவணங்கள் கட்டாயமாப எல்லோராலும் எடுத்துவரப்பட வேண்டியதோடு**, இல vii முதல் xi வரை உள்ள **2018.06.01 ஆம் திகதிக்குரிய** கல்வி மற்றும் அனுபவம் தொடர்பான தகைமைகளில் **தங்களுக்குப் பொருத்தமான தகைமைகளுக்கான சான்றிதழ்களை மட்டும்** முன்வைக்க வேண்டும்)

i. தேசிய அடையாள அட்டை
ii. பிறப்புச் சான்றிதழ் (பெயரில் மாற்றம் இருப்பின் சத்தியக் கடதாசி)
iii. சேவைச் சான்றிதழ் (தற்போது சேவையாற்றும் பாடசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்)
iv. இலங்கை ஆசிரியர் சேவையில் முதல் நியமனக் கடிதம்
v. ஆசிரியர் சேவையில் நியமனத்தினை உறுதிப்படுத்திய கடிதம்
vi. முறையாக பூரணப்படுத்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளரின் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கேற்ப சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (இணைப்பு 01) (அவ்வறிக்கையில் தாங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் தங்களது தகைமைகள் தொடர்பான தகவல்கள் சரியாகவும், ஆலோசனைகளுக்கு ஏற்பவும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை பரீட்சித்து சமர்ப்பித்தல் வேண்டும்.)
vii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது தேசிய கல்வியியல் கல்லூரியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வி இளங்கலைப் பட்டம் தொடர்பான சான்றிதழ்.
viii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட யாதாயினும் பாடத்துறைக்கான பட்டச் சான்றிதழ்
ix. பட்டப் பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ்
x. ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்
xi. தேசிய போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ்

04. மேலே 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஆவணங்களும் நேர்முகத் தேர்வின் போதே முன்வைக்கப்பட வேண்டியதோடு, பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. பொது நேர்முகத்தேர்வின் போது அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு அனுப்பப்படுவதோடு, கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் போது அதிபர்களினது கடமைகளும் பொறுப்புக்களும் தொடர்பான தலைப்பொன்றின் கீழ் வாய்வழி முன்வைப்பு ஒன்று முன்வைக்கப்படல் வேண்டும். அதற்காக வழங்கப்படும் அதிகூடிய காலவரையறை 5 நிமிடங்கள் ஆகும். இதன் போது அவசியமாயின் உசாத்துணை நூல்களை எடுத்துவரவும் சந்தர்ப்பம் உண்டு. இவ் வாய்வழி முன்வைப்பானது முன் திட்டமிடப்பட்ட திட்டம் ஒன்றிற்கு ஏற்ப நிகழ்த்த முடியும். தங்களது முன்வைப்பிற்கு வெண் பலகை (white board) மற்றும் அதற்குரிய பேனை என்பன மட்டும் உதவியாக வழங்கப்படுவதோடு, அவ் முன்வைப்பிற்கு புள்ளிகள் வழங்குகையில் பின்வரும் தேர்வளவுகள் கருத்திற்கொள்ளப்படும் என்பதை மேலும் அறியத்தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| i. | அறிமுகம் | - 04 புள்ளிகள் |
| ii. | முன்வைத்தல் திட்டம் | - 04 புள்ளிகள் |
| iii. | முன்வைக்கும் ஆற்றல் | - 08 புள்ளிகள் |
| iv. | விடயம் சார்ந்த அறிவு | - 05 புள்ளிகள் |
| v. | நேர முகாமைத்துவம் | - 04 புள்ளிகள் |

06. நேர்முகத் தேர்வில் கலந்துகொள்வதற்காக பிரயாணச் செலவோ அல்லது வேறு எந்தவொரு கொடுப்பனவோ வழங்கப்பட மாட்டாது.

07. இந் நேர்முகத் தேர்விற்கு சமூகமளிப்பதனால் மட்டும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இற்குரிய நியமனத்தினை பெறுவதற்கான உரிமை உண்டென கருதுதல் ஆகாது என்பதனை மேலும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்: எம்.என். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

அனுஷா படவல கமகே
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
(கல்விச் சேவைகள் தாபனம்)

**குறிப்பு** : தங்களுக்கென குறிக்கப்பட்ட திகதி, குறித்த நேரத்திற்கு நேர்முகத்தேர்விற்கு சமூகமளிக்க வேண்டியது கட்டாயமாகும். கல்வி மற்றும் சேவை அனுபவம் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் சான்றுபடுத்தப்பட்ட அவ் ஆவணங்களின் நிழற்பிரதிகள் மேலே இல.03 இல் குறிப்பிடப்பட்டவாறு இலக்கம் **i முதல் xi வரையான ஒழுங்கு வரிசையில்** அவற்றைக் கோவைப்படுத்தி, அக் கோவையின் முன் அட்டையில் தங்களது பெயர் மற்றும் நேர்முகத் தேர்வு அழைப்பு இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அன்றைய தினம் அதனை தம்மோடு எடுத்துவருமாறு தேவைப்பாட்டோடு அறியத்தருகின்றேன். நேர்முகத் தேர்வின் பின்னர் எக்காரணம் கொண்டும் மேற்குறிப்பிட்ட எந்த ஒரு ஆவணமும் தமது தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்க முடியாது என்பதனை கருத்தில்கொள்ளவும்.

**இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018 (2019)**

( 2 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கேற்ப இத் தகவல் படிவம் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்)

.......................................................................................................... வித்தியாலயத்தில் சேவையில் இருக்கும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு .................... ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு/திருமதி/செல்வி ..........................................................................., 2094 இலக்க 2018.10.19 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2018 (2019) இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அறிவித்தலின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவை நியமனத்திற்காக இலங்கை அதிபர் சேவைப் பிரமாணங்களுக்குரிய தகைமைகளை பரீட்சித்துப் பார்க்கும் **2018.06.01** ஆம் திகதிக்கு அண்மித்த **ஐந்து*/ஆறு*** வருட காலத்திற்குரிய தகவல்கள் பின்வருமாறு ஆகும்.

(பொருத்தமற்ற சொல்லை வெட்டிவிடவும்)

1. அடையாள அட்டை இலக்கம் :
2. ஆசிரியர் சேவை நியமனம் செல்லுபடியாகும் திகதி:
3. ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி:
4. அண்மித்த **ஐந்து*/ஆறு*** வருட காலத்திற்குள் திருப்திகரமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்து **உள்ளார்*/ இல்லை*** (பொருத்தமற்ற சொல்லை வெட்டிவிடவும்)
5. அண்மித்த **ஐந்து*/ஆறு*** வருட காலத்திற்குள் சம்பளமற்ற விடுமுறை பெற்று **உள்ளார்*/இல்லை*** (பொருத்தமற்ற சொல்லை வெட்டிவிடவும்). அவ்வாறு சம்பளமற்ற விடுமுறை பெற்றிருப்பின் அது தொடர்பான தகவல்கள்

| **வருடம்** | **காலம்** | **சம்பளமற்ற விடுமுறைக் காலம்** |
|---|---|---|
| .............................. | .............................. முதல் ........................வரை | .........ஆண்டு ............மாதம் .............நாட்கள் |
| .............................. | .............................. முதல் ........................வரை | .........ஆண்டு ............மாதம் .............நாட்கள் |
| .............................. | .............................. முதல் ........................வரை | .........ஆண்டு ............மாதம் .............நாட்கள் |
| .............................. | .............................. முதல் ........................வரை | .........ஆண்டு ............மாதம் .............நாட்கள் |
| .............................. | .............................. முதல் ........................வரை | .........ஆண்டு ............மாதம் .............நாட்கள் |
| .............................. | .............................. முதல் ........................வரை | .........ஆண்டு ............மாதம் .............நாட்கள் |

6. அண்மித்த **ஐந்து*/ஆறு*** வருட காலத்திற்குள் சம்பளப்படியேற்றங்கள் அனைத்தையும் பெற்று **உள்ளார்*/இல்லை*** (பொருத்தமற்ற சொல்லை வெட்டிவிடவும்). சம்பளப்படியேற்றம் இடைநிறுத்தப்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள்

| **சம்பளப்படியேற்றம் இடைநிறுத்தப்பட்ட காலம்** | **காரணம்** |
|---|---|
| .............................. முதல் ........................வரை | |
| .............................. முதல் ........................வரை | |
| .............................. முதல் ........................வரை | |

.............................................................
வலயக் கல்விப் பணிப்பாளர்
(ஒப்பம் மற்றும் பதவி முத்திரை)

***2 ஆம் பக்கத்திலுள்ள ஆலோசனைகளைப் பார்க்கவும்**

**7.** அண்மித்த **ஐந்து*/ஆறு*** வருட காலத்திற்குள் ஒழுக்காற்று, கணக்காய்வு அல்லது விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு **உள்ளார்*/இல்லை*** (பொருத்தமற்ற சொல்லை வெட்டிவிடவும்). அவ்வாறு ஒழுக்காற்று, கணக்காய்வு அல்லது விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பின் அவை தொடர்பான தகவல்கள்

| வருடம் | ஒழுக்காற்று/ கணக்காய்வு/விசாரணைகள் அவற்றுள் எது என்பதை குறிப்பிடவும் | 2018.06.01 ஆம் திகதிக்கு அதன் நிலை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் இவ் உத்தியோகத்தரது சுயவிபரக் கோவையின் பிரகாரம் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ..................................................

..............................................................................
வலயக் கல்விப் பணிப்பாளர்
(ஒப்பம் மற்றும் பதவி முத்திரை)

**<u>ஆலோசனைகள்:</u>**

1. (அ) இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய ஐந்து வருட (05) அனுபவம் என்பது, இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.2.1 (i) மற்றும் (ii) ஆம் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தகைமைகளை உடைய உத்தியோகத்தர்களை என்பதனால், அக் கல்வித் தகைமைகளை உடைய உத்தியோகத்தர்கள் தொடர்பில் இத் தகவல் படிவம் பூரணப்படுத்துகையில் கருத்தில் கொள்ளப்படும் அண்மித்த வருடங்களின் எண்ணிக்கை 05 வருடங்கள் ஆகும்.

❖ 7.2.2.1 (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது தேசிய கல்வியியல் கல்லூரியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வி இளங்கலைப் பட்டம்

❖ 7.2.2.1 (ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட யாதாயினும் பாடத்துறைக்கான பட்டச் சான்றிதழ் உடன் பட்டப் பின் கல்வி டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் /தேசிய போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ்

(ஆ) இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய ஆறு வருட (06) அனுபவம் என்பது, இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.2.1 (iii) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தகைமைகளை உடைய உத்தியோகத்தர்களை என்பதனால், அக் கல்வித் தகைமைகளை உடைய உத்தியோகத்தர்கள் தொடர்பில் இத் தகவல் படிவம் பூரணப்படுத்துகையில் கருத்தில் கொள்ளப்படும் அண்மித்த வருடங்களின் எண்ணிக்கை 06 வருடங்கள் ஆகும்.

❖ 7.2.2.1 (iii) தேசிய போதனாவியல் டிப்ளோமா / சான்றிதழ் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுள்ளவர்கள்
❖

(இத் தகவல் படிவத்தில் சேவைக் காலத்திற்குரிய வருடங்களின் எண்ணிக்கை மிகத் திருத்தமாக குறிப்பிடுதல் முக்கியமானதாகும்)

2. உத்தியோகத்தருக்கென பூரணப்படுத்தப்படும் தகவல் படிவத்தில் யாதாயினும் திருத்தம் செய்யப்படின் **அவ்விடங்களில் குறுகிய ஒப்பம் இட்டு பதவி முத்திரை இடப்பட வேண்டியதோடு அழிக்கும் திரவம் (டிப்பெக்ஸ்) பயன்படுத்தி திருத்தம் செய்தல் ஆகாது.**

**குறிப்பு : இத் தகவல் படிவமானது, இதனை எடுத்துவரும் உத்தியோகத்தரை இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைக்கு மிகவும் அவசியமானது என்பதனால், பூரணப்படுத்துகையில் இதற்கு சேவை முன்னுரிமை வழங்கி இதனை மிகச் சரியான முறையில் மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை பெரிதும் மதிக்கின்றேன்.**